RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s744

OPEN ACCESS

# சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை - சிறுகதைத் தொகுப்பில் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

**த. வாசுகி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, சென்னை-600017, தமிழ்நாடு, இந்தியா.

# A Green Bird with a Red Neck – Issues in Women's Life in the Short Stories

**T. Vasuki** [a, *]

[a] Department of Tamil, Shri Shankarlal Sundarbai Shasun Jain College for Women, Chennai-600017, Tamil Nadu, India

* Corresponding Author: vasuki@shasuncollege.edu.in

Received: 01-01-2022
Revised: 26-04-2022
Accepted: 02-05-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Literature in the form of short stories captures the social issues and events of the day. Tamil short story writers use their writing to reflect on the Tamil culture and way of life. Feminist author Ambai has demonstrated how female characters can successfully handle issues in their lives. In Ambai's short stories, a girl who has been terrified for a very long time and unable to run by herself can be seen strolling as an innovator. Her short story, "A Green Bird with a Red Neck," explores a woman's life struggles and her love for her father. The collection of short stories "Payanam 21" demonstrates how determined women who wish to be married again must be to overcome obstacles at home and in society. The short story "The City that Rises from the Ashes" helps the reader to understand the sorrow of women who work despite age and retirement restrictions. Next, in the short story 'A Green Bird with a Red Neck', the author reveals that women abandoned by their husbands are determined to raise their children on their own. The short story "Veethal" depicts the suffering endured by mothers whose children live abroad. Another short story, 'Poikai' reveals that men cannot live a woman's life, even for a single day. Apart from these, the lives of economically backward women and the hardships faced by women in other countries can be seen in the short stories. Ambai's collection of short stories, "A Green Bird with a Red Neck," demonstrates how female characters bravely handle a variety of life issues. It has received the Best Book Award in Tamil for 2021. The purpose of this article is to explore the lives and problems of diverse women that are told in the thirteen short stories in this book.

**Keywords:** Literary Genre, Patriarchy, Oppression, Feminism, Violence, Social Coercion

## முன்னுரை

தமிழ் இலக்கிய வகைமைகளில் சிறுகதை இலக்கியம் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்று விளங்குகிறது. மிகுதியான வாசிப்பாளர்களை உடைய இலக்கிய வகைமையாக விளங்குகிறது. ஒவ்வோர் ஆண்டும் எண்ணிலடங்காச் சிறுகதைகள் சமூகத்தின் நிகழ்வுகளையும், சிக்கல்களையும் பிரதிபலிக்கும் வகையில் வெளிவந்தவண்ணம் உள்ளன. அரசும், தமிழ் ஆர்வலர்களும் சிறுகதை இலக்கியத்திற்கு ஆண்டுதோறும் பரிசளித்துப் பாராட்டிச் சிறப்பிக்கின்றனர். அந்த வகையில் சாகித்ய அகாதெமி 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூலுக்கான விருதினை எழுத்தாளர் அம்பை எழுதிய சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை -சிறுகதைத் தொகுப்பிற்கு வழங்கியுள்ளது. இந்நூலில்

இடம்பெற்றுள்ள 13 சிறுகதைகளில் குடும்பச்சூழல், வேலை, வயது, கல்வி போன்றவற்றால் வேறுபடும் பலதரப்பட்ட பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை விவரித்துள்ளார்.

## சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை - பெண்ணியப் படைப்பு

இந்தியப் பண்பாட்டில் நெடுங்காலமாக ஆணாதிக்கம் நிலைத்து நிற்கிறது. பெண்கள் குடும்பத்திலும், வெளியிலும் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் சுதந்திரத்தை இழந்தவர்களாகவே உள்ளனர். அவர்களின் உரிமைகள் எழுத்தளவிலேயே உள்ளன. கடமைகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன. பயத்துடன் அடிமைத்தனமான வாழ்வு கொண்டவளர்களாக இயங்குகின்றனர்.

பெண்ணியம் என்பது பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள், வேலைத்தளத்தில் ஏற்படும் பிரச்சினைகள், ஆணாதிக்க அடக்குமுறைகள், குடும்ப வன்முறைகள் போன்றவற்றைப் பேசுதல், எழுதுதல், எதிர்த்துப் போராடுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. தமிழ் இலக்கிய உலகில் பெண்ணியச் சிறுகதையாசிரியராக அறியப்படுபவர் அம்பை. டாக்டர் சி. எஸ். லக்ஷ்மி என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் அம்பை நாற்பது ஆண்டுகளாகப் பெண்கள் வரலாறு, வாழ்க்கை பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருப்பவர். பெண்ணிய எழுத்தாளரான அம்பை படைத்துள்ள சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை சிறுகதைத் தொகுப்பின் சிறுகதைகள், பெண்களின் சுதந்திரத்தைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றன. அவரது சிறுகதைகள் பல்வேறு வாழ்வியல் போராட்டங்களைப் பெண்கள் எதிர்கொள்ளும் முறைமையை நிகழ்வாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கதைகளில் பெண்கள் ஆணைச் சார்ந்தே வாழவேண்டும் என்ற சமூக நிர்ப்பந்தத்தை மீறி எவ்வாறு வெளிவருகிறார்கள் என்பதையும், தங்களுக்கான வாழ்வைத் தாங்களே அமைத்துக் கொள்ளும் சுதந்திர உணர்வினையும் காணமுடிகிறது.

## பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

இலக்கியம் சமூகத்தைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடி. உலக வாழ்வில் பெண்ணிற்கு ஏற்படும் சிக்கல்கள் ஆணினின்று பெரிதும் வேறுபடுவதாக உள்ளன. பெண்கள் வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை நூலில் இடம்பெறும் சிறுகதைகள் இக்கால கட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் போராட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. இன்றைய பெண்ணியவாதிகள் பேசும் ஆண் - பெண் பேதமற்ற சமூகச் சூழலை உருவாக்க முனைந்துள்ளார். சொல்ல வந்ததைத் தீவிரமாகச் சொல்லல், மனத்தில் பட்டதைச் சொல்லல், எழுத்துக் கூச்சமின்மை என்பன போன்றவை இவரைத் தனித்து இனம் காட்டுகின்றன (Sirpi Balasubramaniam & Neela Padmanabhan, 2013). சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை நூலில் இடம்பெறும் சிறுகதைகளில் திருமணமாகாதப் பெண்கள், கணவனை இழந்தோர், கணவனால் கைவிடபட்ட பெண்கள், மறுமணம் புரிந்த பெண்கள், மதக் கலவரத்தால் பாதிக்கப்படும் பெண்கள், பிறநாடுகளில் வாழும் தமிழகப் பெண்கள் ஆகியோர் வாழ்வில் நேரிடும் சிக்கல்களை எதிர்கொள்ளும் விதத்தைப் பல கோணங்களில் கதைப்படுத்தியுள்ளார்.

## திருமணமாகாத பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

திருமணம் என்னும் பந்தத்தை இருபாலருமே விரும்புகின்றனர். பெற்றோர்மேல் கொண்ட அன்பே பெண்ணின் திருமணத்திற்குத் தடையாக இருப்பதைத் 'தொண்டை புடைத்த காகம் ஒன்று' சிறுகதையில் அம்பை வெளிப்படுத்துகிறார். அக்கதையில் கல்யாணி, சன்னலில் அமர்ந்து தான் விரும்பிய உணவை மட்டுமே உண்ணும் காகத்தைப் பார்த்ததும் தன் தந்தையின் நினைவில் ஆழ்ந்து விடுகிறாள். உடல் நலமும், மனநலமும் குன்றிய தந்தையைக் காப்பாற்றப் போராடுகிறாள். அவளுக்குக் காதல் ஏற்பட்டது. “உன் வாழ்க்கையில் அங்கிங்கெனாதபடி எங்குமே உங்கப்பா தான் இருக்கிறார்” என்று அவர்கள் குற்றம் சொன்னதும் கரைஒதுங்கவும் கற்றுக்கொண்டாள் (Ambai, 2021).

திருமணமாகாத கல்யாணி தந்தை இறந்த பின் தந்தையின் நினைவையும், தாயின் பிரிவையும் மறக்க முடியாமல் தவிக்கிறாள். தந்தையைப் பொறுப்புடனும், தைரியத்துடனும் கவனித்துக் கொண்ட அவளால் தந்தையின் பிரிவையும், தனிமையையும் எதிர்கொள்ள முடியாமல் துவண்டு விடுவதை இக்கதையில் அம்பை வெளிப்படுத்துகிறார்.

## மறுமணம் செய்த பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

தற்காலத்தில் பெண்களின் மறுமணத்தைக் கவிஞர்களும், புரட்சியாளர்களும் வரவேற்கின்றனர். மறுமணத்திற்கான விருப்பத்தைப் பெண்களிடம் கேட்காமல் இருப்பது அநீதி என்பதைப் பாரதிதாசனும்

'மாண்டவன் மாண்ட பின்னர்- அவனின்

மனைவியின் உளத்தை

ஆண்டையர் காண்பதில்லை- ஐயகோ

அடிமைப் பெண் கதியே!' என வருந்துகிறார் (Paramasivan, 1993).

நம் சமூகக் கட்டமைப்பில் பெண்கள் மறுமணம் செய்தால் வீட்டிலோ வெளியிலோ வரும் எதிர்ப்புகளைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. 'பயணம் 21' சிறுகதையில் நாட்டியக் கலைஞரான காமும்மா மேடையில் ஆடக் கூடாது என்று தடுத்த உயர்மட்ட குடும்பத்துக் கணவனை விட்டுவிட்டு வயிற்றில் மூன்று மாதக் குழந்தையுடன் வெளியேறியவள் பின் ராசப்பாவுடன் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்க்கையை வாழ்ந்தவள் (Ambai, 2021). கணவனை விட்டுப் பிரிந்ததால் மறுமணம் செய்ததால் பல வசைசொற்களால் அழைக்கப்படுகிறாள். பெண்கள் விரும்பும் கலை மற்றும் வேலைகளைத் தொடர எதிர்வரும் தடைகளை உடைத்தெறிய வேண்டும் என்பதை இச்சிறுகதை உணர்த்துகிறது. இவ்வாறே 'வில் முறியாத சுயம்வரங்கள்' சிறுகதையில் கணவனை இழந்த சாந்தி மறுமணம் செய்வதை அவளின் மகளும், மகனும் விரும்பவில்லை. தாயின் மறுமணத்தால் சொத்துகள் கிடைக்காமல் போய்விடுமோ என அஞ்சித் தடுக்கின்றனர். ஆனால் சாந்தி 'தன்னுடைய மறுமணத்திற்கு யார் சம்மதமும் தேவையில்லை. இது சரிதான். இது என் முடிவு' எனப் பிள்ளைகளிடம் கூறிவிட்டுத் தன்னை விரும்பிய துணையுடன் வாழ முடிவெடுக்கிறாள்.

## வயதான பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

பெண்ணிற்கு ஓய்வுபெறும் காலம் என்பதே இல்லை. வயதானாலும் பெண் குடும்பத்தின் பொறுப்புகளைச் சுமப்பதால் மனஉழற்சிக்கு ஆளாகிறாள். 'சாம்பல் மேல் எழும் நகரம்' சிறுகதையில் 75 வயது ஊர்மிளாவிடம் வீட்டையும், 95 வயது பாட்டியையும் கவனிக்கும் பொறுப்புத் திணிக்கப்படுகிறது. ஊர்மிளாவால் சமாளிக்க முடியாமல் தற்கொலை செய்துவிடுகிறாள். 95 வயது பாட்டி, முதியோர் இல்லத்திற்கு சென்ற சில நாள்களிலே மனவேதனையில் இறந்துவிடுகிறாள். இன்றைய இளைய தலைமுறையினர் முதியோரைக் கவனிக்கும் பொறுப்பைத் தவிர்க்கவே முயல்கின்றனர். இதனால் வயதான பெண்களின் வாழ்வியல் சிக்கலுடையதாகிறது.

## கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

திருமணம் என்கின்ற பந்தம் உறவினர், தெய்வம் சாட்சியாக மகிழ்வோடு நடைபெறுகிறது. வாழ்வின் இறுதிவரை துணையாக விளங்க வேண்டிய கணவன், மனைவியைக் கைவிட்டு எங்கோ செல்லும் போது பெண்ணின் வாழ்வு வேதனைக்குரியதாகிறது. அவ்வாறே 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' சிறுகதையில் வசந்தன், தன் மனைவி மைதிலியை விட்டு எங்கோ சென்று விடுகிறான். மைதிலி, கணவன் மீது கொண்ட மிகுந்த காதலால் தேடக் கிளம்புகிறாள். இத்தகைய காதலின் உயர்வைக் கவிஞர்கள் கவிதைகளாக வடித்துள்ளனர்.

'கா த ல்

எழுத்துக்களால்

அடுக்க முடியாத

வார்த்தை!

வார்த்தைக்குள் அடக்க முடியாத

அர்த்தம்

அர்த்தம் இன்றிப்

பேசமுடிந்த பாஷை!'

என்கிறார் கவிஞர் (Parthiban, 2000). கணவனால் கைவிடப்பட்ட மைதிலி, தன் மகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாள். இத்தகைய தைரியமிக்க பெண்களை அம்பையின் சிறுகதைகளில் காண முடிகிறது.

## கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

கணவனை இழந்த பெண் அன்பில்லாத பிள்ளைகளோடு வாழ முடியாமல் மிகுந்த வேதனையடைவாள். இத்தகைய பெண்ணின் வாழ்வில் நடக்கும் போராட்டத்தை 'வீழ்தல்' சிறுகதையில் அம்பை விவரிக்கிறார். 75 வயதான சத்யாவைச் சிகிச்சையின் மூலம் மீட்டு விடவேண்டும் என மனைவி கமலா நினைக்கிறாள். ஆனால் பணத்தைச் செலவு செய்து தந்தையைக் குணபடுத்த அமெரிக்காவில் பணிபுரியும் ஆதி விரும்பவில்லை. தந்தையின் உடல் காலாவதியாகும் நேரம் தானே என நினைக்கிறான். இதனால் கமலா கணவனை இழக்கிறாள். கணவனை இழந்த கமலா அன்பில்லாத மகனோடு வாழ விரும்பாமல் தற்கொலை செய்து கொள்கிறாள். இத்தகைய சூழலை கணவனை இழந்த பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கலாக விளங்குவதை நாம் உணரமுடிகிறது.

நெருங்கிய உறவினர்களே நம்மை அழிப்பவராகவும் இருப்பர் என்பதை ஔவையாரும்,

'உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்கவேண்டா

உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா

மாமலையில் உள்ள மருந்தே பிணி நீக்கும்

அம் மருந்து போல்வாரும் உண்டு'

என்ற மூதுரைப் பாடலில் கூறியது இங்கு நினைவுகூறதக்கது (Muhilai Rajapandian, 2017).

## துணிச்சலான பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

பெண்கள் வாழ்வில் பிரச்சினைகள் குறுக்கிடும் போது தைரியமாக எதிர்கொள்ளும் பெண்களைத் தன் சிறுகதைகளில் படைத்துள்ளார். 'வில் முறியாத சுயம்வரம்' சிறுகதையில் கணவனை இழந்த சாந்தி தன் நண்பனுடன் சேர்ந்து வாழவிரும்புகிறாள். சாந்தியின் மகனும், மகளும் மறுப்புத் தெரிவிக்கும்போது சாந்தி "இதுல யார் சம்மதமும் தேவையில்லை, பேட்டா" என்கிறாள். மறுமணத்தை விரும்பும் பெண் பிறரின் சம்மதத்தை எதிர்நோக்கத் தேவையில்லை என்னும் அம்பையின் கருத்துப் பாராட்டுதற்குரியது. 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' சிறுகதையில் மைதிலியின் கணவன், நான் தளைகளை வெறுப்பவன் என்று கடிதம் எழுதிவிட்டுச் சென்று விடுகிறான். மைதிலி தன் செவித்திறன் குறைபாடு உடைய மகளுடன் தைரியத்துடன் வாழ முடிவெடுக்கிறாள்.

## பெண்ணாக மாறிய ஆணின் வாழ்வியல் சிக்கல்கள்

பெரும்பாலான பெண்கள் தாங்கள் ஆண்களைப் போன்ற சுதந்திரமான வாழ்வை வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால் ஆண்கள், பெண்களாக வாழ வேண்டும் என்று விரும்புவதில்லை. காரணம் பெண்ணின் இயங்குவெளி பெற்றோர், சகோதரன், கணவன் மற்றும் மகனின் விருப்பபடியே அமையும். பெண்களின் இயங்குவெளிப் பற்றி, கணேசலிங்கன் "பெண்கள் வெளியே செல்லும் வேளை கணவனுடனோ, பெற்றோர், நெருங்கிய உறவினருடனோ தான் செல்ல வேண்டும். தனியாக்ச் சென்றால் ஆண்களினால் பலாத்காரம் நடைபெறலாம். கேலி பேசலாம் என்பவையே முக்கியக் காரணம்" என்று தெரிவிக்கிறார். 'பொய்கை' சிறு கதையில் வன நடைப் பயணத்தை ஆண்கள் மேற்கொள்கின்றனர் (Ganesalingan, 1995). அக்குழுவில் ஒருவன் பொய்கை ஒன்றில் குளிக்கும்போது பெண்ணுக்குரிய உறுப்புகள் உருவாகிப் பெண்ணாகிறான். அவனுடன் வந்தவர்கள் வனப் பயணத்திற்குப் பெண் தகுதியற்றவள் என்று கூறி அவளை(னை)த் திருப்பி அனுப்ப நினைக்கின்றனர். ஆனால் அன்று இரவே அடையாளம் தெரியாத சிலரால் பலாத்காரபடுத்தப்படுகிறாள். பெண்ணாக மாறிய ஆண் துடிதுடித்துப் போனான். "சிதறிக் கிடந்த உடைகளை அணிந்தபோது கீறல்களும் காயங்களும் குருதியுமாய்க் குலைக்கப்பட்ட உடலைப் பார்த்துக் கண்ணீர் பெருகியது. கூடாரத்தில் நுழைந்து கீழே உட்கார்ந்து அழத் தொடங்கினான்" (Ambai, 2021). பெண்ணாக மாறிய ஒரே நாளிலேயே உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் வேதனையடைகிறாள். பொய்கையில் குளித்தபோது மீண்டும் ஆணாக மாறுகிறான். ஆனந்தமா ஆசுமாசமா என்று கூற முடியாத உணர்ச்சியில் மகிழ்வோடு ஓடத் தொடங்குகிறான் என்று இக்கதையை எழுத்தாளர் அம்பை முடிக்கிறார். இக்கதையில் பெண்களின் வாழ்வில் நடக்கும் அடக்குமுறைகளையும், இன்னல்களையும் உணர்ந்த ஆண்கள் தாங்கள் பெண்ணாக மாறி வாழ விரும்புவதில்லை என்பதை உணர்த்தியுள்ளார்.

## பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

பெண்களைக் குடும்ப சூழல், கல்வியறிவின்மை போன்றவை பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக உருவாக்கி விடுகின்றன. இத்தகைய நிலையில் பெண்கள் தைரியமானவர்களாகத் தன் வாழ்க்கையை நகர்த்தும் தன்மையைக் 'குதிரை(க்) காரி' சிறுகதையின் ரேஷ்மாவின் மூலம் உணர்ந்து கொள்ளமுடிகிறது. ரேஷ்மாவின் கணவன் அவளை வைத்துப் பணம் பண்ண முயற்சி செய்தான். அவன் மண்டையில் குக்கர் மூடியால் ஒரு போடு போட்டுவிட்டு அவன் மயங்கியதும் ஓடினாள். பின்னர் ஏற்பட்ட முஸ்லிம் இன்ஸ்பெக்டருடான திருமணமும் தலாக்கில் முடிந்தது. குதிரை ஒன்றை வளர்த்து, அதைத் திருமண விழாக்களுக்கு அனுப்புவது மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருபத்தைந்து வயதான பெண்ணான அவள் தன் வாழ்க்கையை நகர்த்தி வந்தாள். அவளின் குதிரை, திருமணவிழாவில் மிரண்டு ஓடியதால் குடியிருந்த இடத்தையும் மாற்ற வேண்டிவந்தது. பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண் கதாப்பாத்திரமும் தன்னம்பிக்கையோடு வாழ்க்கையை நடத்தும் போக்கினை அம்பையின் சிறுகதைகளில் காண முடிகின்றன.

## சமூக நிகழ்வுகளால் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்கள்

மதக் கலவரங்கள் நடக்கும் போது பெண்கள் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்படைவதை '1984' என்னும் சிறுகதையின் மூலம் எடுத்துரைக்கிறார். சமூகம், பெண்களின் உயர்வினை, அறிவு மேம்பாட்டை வீழ்த்தி ஒன்றும் இல்லாதவளாக மாற்ற முயல்கிறது. அவளின் அறிவுத் திறன், ஆண்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக விளங்குகிறது என்பதைச் 'சிங்கத்தின் வால்' சிறுகதை விவரிக்கின்றது. வெளிநாடுகளிலும் பெண்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்வதை 'பயணம் 22' மற்றும் 'பயணம் 23' ஆகிய சிறுகதைகள் பிரதிபலிக்கின்றன. இன்றைய சமூகச் சூழலால் பெண்களின் வாழ்வில் ஏற்படும் மாற்றத்தை மரபுமீறலாகக் கருதிக் குற்றவாளியாகக் கருதக்கூடாது என்பது பெண்ணியவாதியாகிய அம்பையின் கருத்தாக உள்ளது. 'இரண்டு வெற்று நாற்காலிகள்' சிறுகதையில் கஞ்சாவை விரும்பிய பெண், அதைவிட இசையில் உருக்கமும், கனிவும்

இருப்பதை உணர்ந்து கஞ்சாவை விட்டுவிடுகிறாள். இக்கதையில் திருமணத்திற்கு முந்தைய கர்ப்பமடைந்த எமிலியாவை அவள் வீட்டினர் அவமானப்படுத்தாமல் அன்போடு ஏற்றுக்கொள்வதும் புரட்சிகரமான ஒன்றாக அமைந்துள்ளது.

## முடிவுரை

அம்பையின் சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை நூலில் இடம்பெறும் சிறுகதைகள் இக்கால கட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் போராட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. இன்றைய பெண்ணியவாதிகள் பேசும் ஆண், பெண் பேதமற்ற நிலையினை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் பெண்களிடம் உள்ளதைப் பெண் கதாப்பாத்திரங்கள் வழி அறியலாம். மேலும் சிறுகதையில் இடம் பெறும் பெண் கதாப்பாத்திரங்கள் தாங்கள் இயங்கும் வெளிகள் குறித்தும், தேவைகள் குறித்தும் அவர்களே முடிவு செய்யும் பெண்ணியச் சிந்தனையாளர்களாக விளங்குகின்றனர். பெண்கள் மறுமணத்திற்கான முடிவை அவர்களே மனஉறுதியுடன் எடுத்தல் அவசியம் என்பதையும் அம்பை உணர்த்துகிறார்.

## References


Ambai, (2021) Sivappu Kazhuthudan Oru Pachai Paravai, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Ganesalingan, S., (1995) Pen Adimai Theera, Kumaran Veeliyeedu, Chennai, India.

Muhilai Rajapandian, (2017) Avvaiyaar Aruliya Aranoolgal, Sri Indu Publications, Chennai, India.

Paramasivan, Tho., (1993) Bharathidasan Padalgal, Kalachuvadu pathippagam, Chennai, India.

Parthiban, R., (2000) Kerukkalkal, R. S. Graphics, Velappan Chavadi, Chennai, India.

Sirpi Balasubramaniam, Neela Padmanabhan, (2013) Puthiya Tamil Ilakkiya Varalaru, Sahitya Akademi, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License